**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 172/2024**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ரபிக்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. ஜவஹர்** | **Calling** | : | **காவல் ஆய்வாளர், RS மங்களம் காவல் நிலையம்** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **இராமநாதபுரம்** | **Age** | : | |
| | | | **Dated** | : | **19.02.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**1, 2, 5 வரையிலான எதிரிகள் ஆஜர். 4 மற்றும் 6-ம் எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 1 (பட்டியல் சாட்சி 1), **திரு. ரபிக்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் தற்போது ராமநாதபுரம் மாவட்டம், RS மங்களம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.08.2016 ம் தேதி திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது, காலை 03.00 மணிக்கு நானும், சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. சதானந்தம், தலைமை காவலர் திரு. பாலமுருகன் ஆகியோருடன் குற்ற தடுப்பு சம்மந்தமாக ரோந்து செய்து வரும்போது,

திண்டுக்கல் முத்தலகுபட்டி கப்பல்மாதா கோவிலுக்கு எதிரே உள்ள கல்லறைத் தோட்டம் அருகே சென்றபோது, அங்கு நின்று பேசிக் கொண்டிருந்த பின்னர் பெயர், விலாசம் கேட்டுத் தெரிந்த 1. நாட்ராயன், 2. சரவணன், 3. ராஜ்குமார் என்ற ஊசி ராஜ்குமார், 4. சகாயராஜ், 5. செபஸ்டியான் என்ற குறவன் செபஸ்டியான், 6. ராமன் ஆகியோர் போலீஸ் பார்ட்டியைக் கண்டவுடன் ஓட முயற்சித்தவர்களை சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தபோது ராமன் என்பவர் மட்டும் ஓடிவிட்டார், மற்றவர்கள் முன்னுக்குப்பின் முரணாக பெயர், விலாசத்தினை மாறி மாறி கூறியதால், சந்தேகத்தின் பெயரில் அனைவரையும் 03.30 மணிக்கு கைது செய்து, 04.00 மணிக்கு நிலையம் அடைந்து எதிரிகள் மீது நிலையக்குற்ற எண். 536/2016, பிரிவுகள் 41(2) Cr.P.C. ன்படி வழக்கு பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின் எதிரிகளைத் தனித்தனியாக விசாரித்தபோது, 1–வது எதிரி நாட்ராயன் என்பவர் எந்தவித அச்சுறுத்தலும், துன்புறுத்தலும் இல்லாமல் தானாக முன்வந்து சாட்சிகள் சண்முகம், கண்ணன் ஆகியோர் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை பதிவு செய்தேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான, "எங்களை அதைத்துச் சென்றால் நாங்கள் முத்தழகுபட்டி கப்பல் மாதா கோவிலுக்கு எதிரே உள்ள கல்லறைத் தோட்டத்தில் கொள்ளையடிக்க மறைத்து வைத்திருக்கும் பொருட்களை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்கிறோம்", **என்ற பகுதி மட்டும் அ.சா.ஆ.2 குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 05.30 மணிக்கு சட்டப்பிரிவை 41(2) CR.P.C. யில் இருந்து பிரிவுகள் 399, 402 இ.த.ச.வின் கீழ் சட்டப்பிரிவு மாறுதல் செய்து அறிக்கை தயார்

செய்தேன். மேற்படி அறிக்கையினை சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–**

சம்பவ இடத்தில் எதிரிகள் என்ன குற்றம் செய்தார்கள் என முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளை கைது செய்தபோது சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றபடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால், இரவு நேரம் என்பதால் பொதுமக்கள் நடமாட்டம் இல்லை. சம்பவ இடத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். 1–ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தினை யார் தட்டச்சு செய்தார்கள் என ஆய்வாளர் விசாரணையில் தாங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்த பொதுமக்களை புகார் கொடுக்க கேட்டதாக ஆய்வாளர் விசாரணையில் குறிப்பிட்டுச்சொல்லவில்லை என்றால், இரவு நேரம் என்பதால் பொதுமக்கள் யாரும் அங்கு இல்லை. சம்பவ இடத்தில் எதிரிகள் இல்லை, காவல் நிலைய புள்ளி விபர கணக்கிற்காக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கின் ஆவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டவை என்றாலும், சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும்,

எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court on 19.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA

Digitally signed by V DEEPA
Date: 2026.02.19 19:03:15 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**